**மநீஷா பஞ்சகம் - தமிழ் விளக்கவுரை கவிதை நடையில்**

**சங்கரரை சங்கரர் கண்டதும் மங்களமே**
**தங்கமும் களிமண்ணும் தாரணியில் ஒன்றென்றே**
**மங்காத ஞானம் மானுடம் பெற்றதே**
**சங்காய் முழங்க  சங்கரன் அருள்வாரே**



**சண்டாளனின் கேள்வி**

அன்னமய உடலையா அசையா ஆன்மாவையா?
எண்ணத்தி லுயர்ந்தவனே எதைநான் நகர்த்த ?

புனிதகங்கை ஆகாயத்தில் பிறந்து வந்ததா
தனியான சண்டாளக் குட்டையில் தோன்றியதா?
எங்கும் பரவிய அது இருப்பது எங்கே ?
தங்கக் குடமா களிமண் குடமா சொல்லய்யா!

ஆழ்கடல் உணர்வை அறிந்த ஞானியே
ஆழ்மனதில் எண்ணங்கள் அறவே இல்லாதவனே
யாரிங்கு சண்டாளன் யாரிங்கு பிராம்மணன்?

பாரிலே பிரிவினைப் பார்ப்பதும் முறையோ ?

**ஆதிசங்கரரின் பதில்**

விழிப்பிலும் கனவிலும் விசித்திர உறக்கத்திலும்
அழியா உணர்வாய் அண்டத்தின் உயிர்யாவிலும்
என்னிலும் உன்னிலும் எறும்பிலும் நிறையுணர்வே
உன்னையே குருவென்றேன் உன்குலம் யாதெனினும்!

உணர்வான பிரம்மமே! உண்மை உலகிலே
குணத்தில் மாறுபடும் மாயை கற்பனையே
உண்மை எதுவென திண்ணமாய் உணர்ந்தேனே
உன்னையே குருவென்றேன் உன்குலம் யாதெனினும்!

மாறும் தன்மை மாறாத மாயையில்
கூறும் உண்மை குறையாத உணர்வே
செய்வினை வாசனை சாம்பலாய்ப் போகுமே
மெய்யுணர்வை அறிந்த இவ்வேளை தனிலே

உலகுயிரின் ஆதார உண்மை எதுவோ
புலன்களின் ஆதார புத்தியும் எதுவோ
கருமேகம் பின்னால் கண்ணறியா ஒளியே
அருவமே நீயே ஆதாரமான குருவே !

ஆனந்தக் கடலில் ஒருதுளி போதுமே
மோனநிலை யோகியின் மௌன அமைதியே
பிரம்மன் அறிந்த பிரம்மமே பேரானந்தமே
சரணம் சரணம் திண்ணமாய் உரைப்பேனே